## திருத்தப்பட்டது

செய்தி வெளியீடு எண்:257 நாள்:27.05.2009

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க மாதமொன்றுக்கு ஆகஸ்ட்'08 வரையில் 6283 மெ.டன் கோதுமை வழங்கப்பட்டது. ஆனால் செப்டம்பர் 2008 முதல் மைய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு பெறுவதன் பேரில் 11283 மெ,டன் கோதுமை தொடர்ந்து பொது விநியோக திட்டத்திற்கு மாதாமாதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சென்னைக்கு 1450 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே

- சென்னை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கோதுமை 10 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.
- குடும்ப அட்டைதாரர்கள் கோதுமையுடன் 1 கிலோ செறிவூட்டப்பட்ட கோதுமை மாவும் வாங்கிக் கொள்ளலாம்.

இதனை குடும்ப அட்டைதாரர்கள், அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கோதுமை மற்றும் கோதுமை மாவு பெறுவதில் குறைகள் இருப்பின், சென்னை துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு (Ph.28551028) அல்லது தெற்கு (Ph.28551026) அல்லது மின் அஞ்சல் மூலம் www.consumer.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

ஆணையாளருக்காக.

**************

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.